திருமதி. த. ந. அனந்தநாயகி: சார், அடுத்த ஆண்டு முத்துக் குளிக்கப்படும் என்று 1971-லேயே செய்தி வந்தது அது 1972-ல் செய்யப்படுமா அல்லது 73-ல் செய்யப்படுமா என்பதை திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 1973-ல் தான் முத்துக் குளிக்கப்படும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக 'பாண்டிய நாடு முத்துடைத்து' என்று குறிப்பிட்டாலே தூத்துக்குடியில் தான் என்பது ஞாபகத்திற்கு வரும். 1973-ல் முத்துக் குளிப்பது என்பதில், இப்பொழுது இருக்கும் முறையேப் பின்பற்றுவார்களா அல்லது அதில் ஏதாவது மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 1973-ல் முத்துக் குளிக்கப்படும் என்று உறுதியாகக் கூறியிருக்கிறார்கள். சங்கு குளிப்பவர்கள்தான் முத்துக் குளிக்கிறார்கள். அவர்கள் எடுப்பதில் மூன்றில் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு மீதத்தை அரசாங்கத்திற்குக் கொடுக்கிறார்கள். அதுதான் இப்பொழுது இருக்கும் முறை.

சென்னை கலெக்டர் அலுவலகத்திற்குக் கட்டடம்

* 269 வினா—**திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கலெக்டர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தற்போது உள்ள சென்னை மாவட்ட கலெக்டர் அலுவலகக் கட்டடம் உபயோகத்திற்கு ஏற்ற வகையில் இல்லை என்று பொறியாளர்கள் அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதோடு அந்த நெரிசலான இடத்தை மாற்றியமைக்க, புதுக் கட்டடம் அமைத்துக் கொடுக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

1972 மார்ச் 1]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்பொழுது இருக்கும் கட்டடத்தையே பழுதுபார்த்து சீர் செய்தால், அதுவே நீண்ட நாட்களுக்கு உபயோகப்படுத்த முடியும் என்று அரசாங்கத்திற்குத் தெரிகிறது.

கிரியாறுத் திட்டம்

* 270 **வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'கிரியாறுத் திட்டம்' இப்பொழுது அரசு பரிசீலனை யில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

தமிழ் நாட்டில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள்

* 271 **வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மேலும் புதிய வேளாண்மைக் கல்லூரி கள் திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை

* 272 **வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு பின்தங்கிய வகுப் பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய வற்றில் பயிலும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அவர் களுடைய இன்றியமையாத கல்வித் தேவையை அடிப்படையாகக் கொண்டு உதவித் தொகைகள் வழங்குவதற்கு அரசாங்கம் மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?